சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **30/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | ஐஸ்வர்யா |
| தந்தை பெயர் | : | தண்டாயுதம் |
| கிராமம் | : | தஞ்சாவூர் |
| தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | மருத்துவ துறை உதவி பேராசிரியர், நாகப்பட்டிணம் மருத்துவமனை. |
| வயது | : | 36 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன்.நான் தற்போது நாகப்பட்டிணம் அரசு மருததுவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து

வருகிறேன். நான் இதற்கு முன்பு கடந்த 04.02.2021ம் தேதியன்று குடவாசல் அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக நான் அவசர சிகிச்சை பிரிவில் அன்றைய தினம் பணிபுரிந்தபோது, காவனூரை சேர்ந்த எட்டியலூர் போஸ்ட், குடவாசல் என்ற ஊரை சேர்ந்த நாகப்பன் என்பவர் எங்கள் மருத்துவமனைக்கு காலை 10.30 மணிக்கு சிகிச்சைக்காக அவரை அவரது பேரன் ராஜா என்பவர் அழைத்து வந்தார். நான் அவரை பரிசோதனை செய்தபோது, அவர் என்னிடம் தெரிந்த ஒரு நபர் தன்னை 04.02.2021 அதிகாலை 12.12 மணிக்கு காவனூரில் உள்ள காலனி தெருவில் வைத்து கத்தியாலும், கட்டையாலும் தாக்கியதாக கூறினார். அவருக்கு இடது கையிலும், இடது காலிலும் வலியிருப்பதாக சொன்னார். வலது கண் புருவத்தின் அருகில் வெட்டுக்காயம் இருந்தது. வலது கையிலும், தலையின் பின் மண்டையிலும் சிராய்ப்பு காயங்கள் இருந்தது. மேற்படி விபரங்களை நான் விபத்து பதிவேடாக பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேட்டின் நகல் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

முதல் விசாரணையில் சொல்லியுள்ள காயங்கள், இரு சக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்தால் மேற்படியான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை. வாய்ப்பு என்றும், நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வலி இல்லாமலேயே ஒரு நபர் வலி இருப்பதாக சொல்லலாம் என சொன்னால், சரியல்ல. இந்த நபர் சிகிச்சைக்கு வரும்போது வலிப்பு வியாதி உள்ளது என்று சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம் சொல்லியுள்ளார். மதுபோதையில் அவர் இருந்தாரா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரணை

செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது உயரதிகாரி கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.19 16:51:47 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.